எந்த ஒரு பள்ளியும் நீக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்று கூறியிருக்கிறார்கள். 1967-68-லே உதவி பெறும் பள்ளியிலே 98 பேர்களும் பஞ்சாயத்து யூனியன் பள்ளியிலே 114 பேர்களும் இருந்தார்கள். 1968-69-லே உதவி பெறும் பள்ளியிலே 46 பேர்களும் பஞ்சாயத்து யூனியன் பள்ளியிலே 165 மாணவர்களும் இருந்தார்கள் என்று கணக்கு இருக்கிறது. கல்வி இயக்குநர் இரண்டு பள்ளிகளும் இயங்கலாம் என்று அரசாங்கத்திற்கு யோசனை கூறியிருக்கிறார்கள்.

செஞ்சியிலே பெண்கள் ஆதாரப்பயிற்சிப் பள்ளி

* 321. வினா—திரு. ரா. சா. முனுசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சியில் ஒரு பெண்கள் ஆசிரியர் ஆதாரப் பயிற்சிப் பள்ளி நிறுவும் உத்தேசம் ஏதேனும் அரசினர் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

வாலாஜாவிலுள்ள மகளிர் ஆதாரப்பயிற்சிப்பள்ளி

* 322. வினா. திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், வாலாஜாவிலுள்ள மகளிர்க்கான அரசினர் ஆதாரப்பயிற்சிப்பள்ளி, அதன் கட்டடம் நல்ல நிலையில்இல்லாததால் மூடப்பட்டு இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பள்ளியின் கட்டிடம் நகராட்சிக்குச் சொந்தமானது. கட்டிடத்தைப் பழுது பார்க்க, இடத்தைக் காலி செய்து வேறு கட்டிடத்தில் பள்ளி இயங்குவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அவ்வாறு முடியாவிட்டால், பள்ளிக்கூடத்தை மூடுவது என்றும், அப்பள்ளி மாணவிகளை வேறு பள்ளியில் சேர்ப்பது என்றும் யோசனையில் இருந்து வருகிறது.

Mobile Hospital under Chittaranjan Das Memorial Scheme

* 323 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to start a Mobile Hospital in this State under the Chittaranjan Das Memorial Scheme; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து செயல்படும் வகையில், சித்தாஞ்சன், செயலூர்தி மருத்துவமனை ஒன்று தொடங்கப் பட்டுள்ளது.

(இ) இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து செயல்படும் வகையில் செயலூர்தி மருத்துவமனை ஒன்று நிறுவப்படுகிறது. இதற்கு ஆகும் தொடர் செலவு மாநில அரசால் ஏற்கப்படுகிறது. ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படும் ரூ. 3.10 லட்சம் தொடராச் செலவை மட்டும் மத்திய அரசு ஏற்கும். மக்கள் தொகையில் 80 சதவிகிதத்துக்கு மேல் உள்ள நமது உழவர் பெருமக்களின் இல்லங்களுக்கு செயலூர்தி மருத்துவமனை நேரடியாகச் சென்று மருத்துவ உதவி அளிப்பதே இந்தச் செயலூர்தி மருத்துவமனையின் நோக்கமாகும். மருத்துவப் பட்டதாரிகளும், அவர்களது பேராசிரியர்களும், கிராமங்களில் பரவியுள்ள நோய்களைப் பற்றி முதல்தர அனுபவம் பெறவும் அவற்றின் காரணங்களைக் கண்டறியவும் இந்த மருத்துவமுறை உதவுகிறது.

Shortage of Oxygen Cylinders in General Hospital.

*324 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that on 15th September 1969 operations at the General Hospital had to be postponed due to shortage of oxygen cylinders; and

(*b*) if so, the precautionary measures taken to prevent recurrence of such situations?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம். நாட்பட்ட நோயாளிகள் இருவருக்கு மட்டும் அன்று செய்யப்படவிருந்த அறுவை சிகிச்சைகள் ஒத்திப்போடப்பட்டன. நாட்பட்ட நோயாளிகள் என்பது கிரானிக் கேஸஸ். எனெனில் அன்று அறுவை சிகிச்சைகளைச் செய்வதனுல் ஏற்படக்கூடிய ஆபத்தைவிட அந்த அறுவை சிகிச்சைகளை ஒத்திப்போடுவது நல்லது என்று கருதப்பட்டது.

(இ) பல்வேறு தேவைகளுக்கு வேண்டியவையைத் தவிர கூடுதலாக ஆறு பிராணவாயு உருளைகள் மருத்துவமனையில் எப்போதும் தயாராக வைக்கப்பட்டுள்ளன. நிறுவனம் கூடுதல் உருளைகளையும் தற்போது வழங்கி வருகிறது. இத்தகைய நிகழ்ச்சிகள் மீண்டும் நடைபெறுமல் தடுப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

DR. H. V. HANDE : Sir, frequently such instances are brought to the attention of the Government, and some of them may be genuine and some of them may not be genuine. The Hon.